[9th August 1966

திரு. கி. இரா. சம்பந்தம் : சார், இந்த அரிசனங்களுக்கு என்று
9-30 a.m. ஒதுக்கப்பட்ட சதவிகிதம் மாணவர்கள் எடுக்கப்பட்டார்களா? எடுக்கப்படாத சதவிகிதம் மற்ற முற்போக்கு மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்டதா அல்லது பார்வேர்ட் மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்டதா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்ட 16 சதவிகிதத்தில் முழுக்க முழுக்க அவர்கள் எடுக்கப்பட்டார்கள். அதோடு அல்லாமல், மெரிட் பேஸிஸில் ஜெனரல் பூலிலும் எடுத்திருக்கிறார்கள். அவர்களுடைய 16 சதவிகிதம் எந்தவகையிலும் குறைக்கப்படவில்லை.

* 283 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Central Government have offered any financial aid to the State Government for starting new medical colleges; and

(*b*) if so, the action taken by the State Government thereon?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM : (*a*) Yes.

(*b*) The details regarding the new medical colleges to be started during the Fourth Five-Year Plan period have been furnished to the Government of India.

திரு. வை. சங்கரன் : எந்த அடிப்படையில் இந்த உதவி மத்திய சர்க்காரால் கொடுக்கப்படும், இத்தனை கல்லூரிகளுக்கு என்று அல்லது ஒரு கல்லூரிக்கு இவ்வளவு என்று?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : நான்காவது திட்டத்திலே இந்தியா பூராவிற்கும் 39 மருத்துவக் கல்லூரிகளுக்கு உதவியளிக்க வேண்டும் என்பது திட்டம். நம் மாநிலத்தைப் பொறுத்த வரையில் மூன்று கல்லூரிகளுக்குக் கொடுக்கவேண்டும் என்று இருக்கிறது. ஆனால், செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியும், திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியும் நான்காவது திட்டத்தில் வருவதாக இருந்தது, மூன்றாவது திட்டத்திலேயே வந்துவிட்டது. இது சம்பந்தமாக மத்திய சர்க்காருக்கு அவர்களுடைய கன்கரன்ஸைக் கோரி எழுதியிருக்கிறோம். அவர்களுடைய பதிலை எதிர்பார்க்கிறோம்.

குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை

** 284 கேள்வி.—திரு. சோ. ஆறுமுகம் :* கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா :

1964-ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 1965-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முடிய தமிழ் நாட்டில் மாவட்டவாரியாக குடும்பக் கட்டுப்பாடு செய்துகொண்ட ஆண், பெண் முறையே எத்தனை பேர்?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM : A statement [a] is placed on the Table of the House.

[a] Printed as Appendix VI at pages 993-994.

9th August 1966]

திரு. சோ. ஆறுமுகம் : ஆண்களைவிட பெண்களுக்கு குடும்பக் கட்டுப்பாடு நடவடிக்கை எடுப்பது நலம் என்ற கருத்து இருக்கிறது. ஆனால், இந்த அறிக்கையில் பெண்கள் எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கிறது. அதற்குக் காரணம் என்ன? குடும்பக் கட்டுப்பாடு மருத்துவ மனைக்குச் சென்றால், ஒரு நாளைக்கு 20 பேர்களுக்குத்தான் சிகிச்சை என்று சொல்லிவிடுகிறார்கள். ஆகவே, இதற்கென்று தனியாக ஒரு ஆஸ்பத்திரியை வைக்க சர்க்கார் முன்வருமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : பெண்கள், ஆண்கள் இரண்டு பேர்களுமே செய்துகொள்ள வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் கொள்கை. அதிகம், குறைவு என்பதெல்லாம் அவரவர்களுடைய தனிப்பட்ட விருப்பு வெறுப்பைப் பொறுத்தது. இன்றைக்கு இருக்கக்கூடிய மருத்துவ மனைகளில் ஸ்பெஷலாக டாக்டர்கள் போட்டு, இதற்கென்று தனியாக டைம் வைத்துக் கொண்டு அறுவை சிகிச்சை செய்கிறார்கள். பெண்கள் குறைவாக இருக்கிறார்கள் என்றால், அதற்கு ஆண்கள்தான் காரணம் என்று நினைக்கிறேன்.

திரு. செ. மாதவன் : குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் 'லூப்' முறையை அமல்படுத்த மத்திய சர்க்கார் ஏதாவது திட்டம் வகுத்து நிதி ஒதுக்கியிருக்கிறதா ? நம் மாநில அரசு எந்த வகையில் அதை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கிறது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : 'லூப்' முறையை மத்திய சர்க்கார் வற்புறுத்திக் கொண்டு வருகிறார்கள். ஆனால், நம்முடைய மாநிலத்தில் அவசரப்பட்டுச் செய்ய வேண்டாம் என்று மூன்று ஜில்லாக்களில் மட்டும், ஸ்பெஷலிஸ்டுகள் இருக்கும் தாலுகா, ஜில்லா ஆஸ்பத்திரிகளில் செயல்பட்டு வருகிறது. மற்ற இடங்களுக்கு மெதுவாக எக்ஸ்டென்ட் செய்ய வேண்டும் என்கிற உத்தேசம் இருக்கிறது.

பாலர் விகாரம்

* 285 கேள்வி.—திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

(அ) சென்னை கோட்டையில் வேலை செய்யும் திருமணமான பெண்களின் நலனுக்காக பாலர் விகாரம் ( ) ஒன்றை கோட்டையில் ஆரம்பிக்க உத்தேசம் உண்டா ?

(இ) ஆமெனில் எப்போது நிறுவப்படும் ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) No.

(b) Does not arise.

திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் : தலைவர் அவர்களே, ஆண்களும் பெண்களும் சேர்ந்து பணிசெய்தால் குடும்பப் பொருளாதாரம் நல்ல முறையில் அமையும் என்று அதிகமாகப் பெண்கள் பணிமனைகளில் பணிபுரிந்து வருவதால், இன்றைக்கு செக்ரடேரியட்டில் கூட அதிகமாகப் பெண்கள் பணி புரிந்து வருவதை